# பொதுக்காலம் 25ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

"பணிவோடு பணி செய்வோரே பெரியவர்" என்ற உயிரோட்டமான சிந்தனையோடு நாம் நம் தாய் திரு அவையோடு இணைந்து ஆண்டின் பொதுக்காலம் 25ஆம் ஞாயிறைச் சிறப்பிக்கின்றோம்.

எல்லா ஆன்மீக நற்பண்புகளின் தலையாய நற்பண்பு மனத்தூய்மை. நற்பண்புகளில் அடிப்படையான நற்பண்பு தாழ்ச்சி. ஞானத்தின் தலைமையான பண்பு தூய்மை ஆகும். மனத்தூய்மையும் தாழ்ச்சியும் நிறைந்த வாழ்வு சீடத்துவத்தின் இருப்பிடம்.

ஆம், நாம் வாழும் இந்த உலகத்தில் ஒருவன் எது செய்தாலும் அதை விளம்பரப்படுத்தி சமுதாயத்தில் தன்னை ஒரு பெரிய ஆளாகக் காட்டிக் கொள்ள முற்படும் ஒரு வியாபார உலகம். இத்தகைய உலகில் ஒரு மாற்று சக்தியாக, குழந்தைகளைப் போல, கள்ளங்கபடற்றவர்களாக, மாசற்ற மனதுள்ளவர்களாக, ஞானம் நிறைந்து, இறை பக்தியில் சிறந்து விளங்கும் இறை மனிதர்களாக வாழ்ந்திட இன்றைய திருவழிபாடு நம்மை அழைக்கின்றது.

"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு நாள்தோறும் என்னைப் பின்பற்றட்டும்" என்ற இயேசுவின் சீடத்துவத்தைப் பின்பற்றும் நாம் எவ்வளவு தலைமையான பொறுப்பில் இருக்கிறோமோ அவ்வளவு தாழ்ச்சியோடு பணியாற்ற திருத்தூதர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் இயேசு, ஒரு தலைவனுக்கு அன்பு, பணிவு, தாழ்ச்சி, பிறர்நலம், பணிவாழ்வு முக்கியம் என்பதையும் உணர்த்துகிறார். எனவே தலைமைக்கு முந்தாமல், பிறர்க்குப் பணி செய்ய, தாழ்ச்சி நிறையுள்ளத்தை வேண்டியவர்களாய் இத்திருப்பலியில் பங்கேற்போம்.

### முதல் வாசக முன்னுரை

அன்புக்குரியவர்களே! பொல்லாதவர்களுக்கும் நல்லவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக் கூறி நம்மை நல்லவர்களாக வாழ அழைப்பு விடுக்கும் சாலமோனின் ஞான நூலின் வார்த்தைகளுக்குச் செவிகொடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

அன்பானவர்களே! தூயவர்கள் ஞானத்தைச் சொந்தமாக்கிக் கொள்வர் என்றும் அந்த ஞானம் எத்தகைய குணாதிசயங்களைக் கொண்டது என்றும் கூறும் புனித யாக்கோபின் திருமுக வார்த்தைகளுக்குச் செவிகொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. படைத்து பராமரிக்கும் எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உமது ஞானத்தினால் நிரப்பி அவர்களின் பணியில் நிறைவும், மகிழ்வும் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பால் அரவணைக்கும் எம் இறைவா! எங்கள் நாட்டை ஆளுகின்ற தலைவர்கள், ஏழை, எளிய மக்களின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு சமுதாய நலனுக்காகவும், நாட்டின் வளர்ச்சிக்காகவும் உழைத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் இறைவா! எம் குழந்தைகளுக்குத் தேவையான ஞானம், உடல் மற்றும் அறிவு வளர்ச்சியைத் தந்து, இறைப்பற்றுள்ள குழந்தைகளாக வளரும் வரத்தினைப் பொழிய வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. ஆறுதலின் இறைவா! கொரோனா பெருந்தொற்றினால் பாதிப்படைந்த குடும்பங்களுக்காக உம்மை வேண்டுகின்றோம். இத்தொற்றினால் உறவினர்களை இழந்து தவிக்கும் அனைவருக்கும் நீர்தாமே ஆறுதலாக இருந்து காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com